உ

மணித்திரள்

தொகுதி 1.

BY

K. GOPALAKRISHNA IYER,
Head Tamil Pandit, Municipal High School,
Mayavaram

PUBLISHED BY
MURTHY & Co.,
MAYAVARAM.
1930

[Price As. 2.

Q2wx
N30
85912

உ

மணித்திரள்

தொகுதி 1.

BY

K. GOPALAKRISHNA IYER,
Head Tamil Pandit, Municipal High School,
Mayavaram.

PUBLISHED BY
MURTHY & Co.,
MAYAVARAM.
1930

[All Rights Reserved] [Price As. 2.

முகவுரை

சிறு பிள்ளைகளுக்குத் தெய்வபக்தி, தேசபக்தி, உண்மை, ந லொழுக்கம் முதலிய நற்குணங்கள் படியுமாறு மணித்திரளின் கல கள் எழுதப்பட்டுள்ளன. எளிய நடையில் உயர்ந்த நீதிகள் புகட் வனவாய் அவை அமைந்திருக்கின்றன. தமிழ்நாடு இத்தகைய நூ களிடம் காட்டிவரும் ஆதரவு கருதி யான் இத்தொகுதியையும் வெ யிட்டேன். அறிஞர்கள் இதன்கண்ணுள்ள வழுக்களை எனக்குணர்த்து மாறு யான் வேண்டுகிறேன்.

28—7—30
மாயூரம்

கி. கோபாலகிருஷ்ணன்

உள்ளுறை

எண்	பாடம்		பக்கம்
1	ஸ்ரீராமர்	...	1
2	பரதர்	...	3
3	சீதை	...	4
4	கண்ணன்	...	6
5	கன்னன்	...	7
6	பிரஹ்லாதன்	...	9
7	அரிச்சந்திரன்	...	10
8	துளசிதாசர்	...	13
9	நாமதேவர்	...	15
10	ஜயதேவர்	...	16
11	மீராபாய்	...	18
12	சங்கரர்	...	20
13	கம்பர்	...	22
14	சிவாஜி	...	24
	தோத்திரப்பாக்கள்	...	28

85912

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

மணித்திரள்.

தொகுதி. 1.

1. ஸ்ரீராமர்

OFFICE OF THE ... 3 - SEP 1930

1. ஸ்ரீராமர் தசரதருடைய பிள்ளை.
2. தசரதர் அயோத்தியின் அரசர்.
3. தசரதருக்கு மூன்று மனைவிகள் இருந்தார்கள்.
4. மூத்தவள் பெயர் கோசலை.
5. கைகேசி இரண்டாம் மனைவி.

6. சுமித்திரை மூன்றும் மனைவி.
7. ஸ்ரீராமர் கோசலைக்குப் பிறந்தவர்.
8. பரதர் கைகேசியினுடைய பிள்ளை.
9. தசரதர் இராமருக்குப் பட்டங்கட்ட எண்ணினார்.
10. கூனி கைகேசியினுடைய வேலைக்காரி.
11. இராமர் குழந்தையா யிருந்தபொழுது கூனியை அடித்தார்.
12. இராமரிடத்தில் கூனிக்குக் கோபம் உண்டு.
13. கூனி பரதருக்குப் பட்டங் கட்டவேண்டும் என்றாள்.
14. கைகேசி கூனியின் சொல்லைக் கேட்டுத் தன் மகனை அரசனாக்கும்படி சொன்னாள்.
15. தசரதர் அதைக்கேட்டு வருத்த மடைந்தார்.
16. இராமர் அதை அறிந்து கொண்டார்.
17. தசரதருக்குக் கைகேசியின் சொல்லைத் தட்ட முடியவில்லை.
18. இராமர் பட்டம் வேண்டாமென்றார்.
19. அவர் தகப்பன் சொல்லைக் காக்க எண்ணினார்.
20. இராமர் தகப்பனுக்காகவும் தாயாகிய கைகேசிக்காகவும் காட்டுக்குப் போனார்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.'

2. பரதர்

1. பரதர் ஸ்ரீராமருடைய தம்பி.
2. இராமர் காட்டுக்குப் போனதும் தசரதர் இறந்துவிட்டார்.
3. பரதர் அப்பொழுது கேகயத்தில் இருந்தார்.
4. அவர் உடனே அயோத்திக்குத் திரும்பினார்.
5. இராமரைக் காட்டுக்குப் போகும்படி செய்த தாயை அவர் கோபித்தார்.
6. அவர் தமக்கு ஆகாரங்கூட வேண்டாமென்றார்.
7. அவர் சந்நியாசியைப்போல் இருந்தார்.
8. பரதர் உடனே இராமரைத் தேடிக்கொண்டு காட்டுக்குச் சென்றார் ;
9. இராமரைக் கண்டு அவரை அயோத்திக்கு வரும்படி அழைத்தார்.
10. இராமர் வரவில்லையென்று சொன்னார்.
11. இராமர் தம்முடைய பாதுகைகளைக் கொடுத்தார்.
12. பரதர் ஊருக்கு வந்து பாதுகைக்குப் பட்டாபிஷேகம் செய்தார்.
13. பரதர் இராமர் திரும்பிவரும் வரையில் காத்திருந்தார்.
14. பதினான்கு வருஷங்கள் ஆயின.

15. ஸ்ரீராமர் திரும்பி வரவில்லை.
16. பரதர் உடனே நெருப்பு மூட்டினார்.
17. அவர் அதில் விழுந்து இறக்க நினைத்தார்.
18. அனுமார் உடனே வந்து இராமர் வந்து விட்டார் என்றார்.
19. ஸ்ரீராமரும் வந்துவிட்டார்.
20. பரதர் அவரைக் கண்டு சந்தோஷித்தார்.

'மாறில் உடன்பிறப்பில்லா உடம்பு பாழ்.'

---

3. சீதை

1. சீதை இராமருடைய மனைவி.
2. இராமர் தனியாகக் காட்டுக்குப் போகக் கிளம்பினார்.
3. புருஷர் காட்டிலிருக்கச் சீதை அரண்மனையில் இருக்க விரும்பவில்லை.
4. அவள் இராமருடன் கூடச் சென்றாள்.
5. கல்லும் முள்ளும் அவள் காலை உறுத்தின.
6. அவள் எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டாள்.
7. காட்டிலுள்ள காய்கனி கிழங்குகளே அவர்களுக்கு உணவு.
8. இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு இலங்கைக்குச் சென்றான்.

9. இராமர் அப்பொழுது வெளியில் போயிருந்தார்.
10. சீதை இராமரைப் பிரிந்து வருந்தினுள்.
11. இராவணன் தன்னுடைய அரசியாக இருக்கும்படி சீதையிடம் சொன்னுன்.
12. சீதை அதற்குச் சம்மதிக்கவில்லை.
13. புருஷரைக் காணுமல் அவள் உயிரைவிட நிச்சயித்தாள்.
14. அனுமார் அப்பொழுது அங்கு வந்தார்.
15. அவர் இராமருடைய மோதிரத்தைச் சீதையினிடங் கொடுத்தார்.
16. சீதை அதைக்கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.
17. அவளுக்கு ஆனந்தம் பெருகியது.
18. இராமர் இராவணனைக் கொன்றுர்.
19. அவர் சீதையை அழைத்துக்கொண்டு சென்றுர்.
20. சீதைக்குத் தன் கணவன் ஞாபகமே எப்பொழுதும் இருந்தது.

'குலமகட்குத் தெய்வம் கொழுநனே.'

4. கண்ணன்

1. கண்ணன் துவாரகையின் அரசர்.
2. அவர் இளமையில் ஒருமுனிவரிடம் படித்தார்.
3. அவருடன் படித்தவர் குசேலர்.
4. குசேலர் மிகவும் ஏழை.
5. அவருக்கு இருபத்தேழு பிள்ளைகள் பிறந்தனர்.
6. உண்ண உணவும் உடுக்க உடையும் அவர்களுக்கு இல்லை.
7. அவருடைய மனைவி கண்ணனிடம் போய்ப் பொருள் கேட்கும்படி சொன்னாள்.
8. குசேலரும் சம்மதித்தார்.
9. அவர் கந்தைத் துணியில் அவலைக் கொண்டு போனார்.
10. கண்ணன் அவரைக் கட்டியணைத்து உபசரித்தார்.

11. அவர் அவருடைய அவலை உண்டார்.
12. கண்ணன் குசேலரை ஏழையென்று நினைக்காமல் அவருக்கு எல்லாம் கொடுத்தார்.
13. அவர் அசுரர்களைக் கொன்று சாதுக்களைக் காப்பாற்றினர்.
14. அவருக்குப் பாண்டவரிடத்தில் பிரிய முண்டு.
15. பாண்டவர்கள் சாதுக்கள்.
16. துரியோதனன் அவர்களுடைய இராஜ்யத்தைப் பிடுங்கிக் கொண்டான்.
17. சபையில் அவர்களுடைய மனைவியை அவன் அவமானஞ் செய்தான்.
18. கண்ணன் பாண்டவருக்கு உதவி செய்தார்.
19. பாண்டவர்கள் ஜயித்து இராஜ்யத்தைப் பெற்றார்கள்.
20. கண்ணன் தருமத்தையே காக்க அவதரித்தவர்.

'அறஞ் செய விருப்பு.'

---

5. கன்னன்

1. கன்னன் குந்தியின் புதல்வன்.
2. குந்தி பாண்டவர்களுக்குத் தாய்.
3. பாண்டவர்களுக்குக் கன்னன் தமையனென்பது தெரியாது.
4. குந்தி கன்னனைக் குழந்தையிலேயே விட்டு விட்டாள்.

5. துரியோதனனுடைய தேர்ப்பாகன் கன்னனை எடுத்து வளர்த்தான்.
6. கன்னன் போரில் வல்லவன்.
7. ஆகையால் துரியோதனன் அவனை ஒரு அரசனாகச் செய்தான்.
8. கன்னன் மிகுந்த தருமஞ் செய்பவன்.
9. அவன் யாருக்கும் கேட்டதைக் கொடுப்பான்.
10. தரும கவசம் அவனைக் காத்தது.
11. கன்னனை ஜயிப்பது முடியாதது.
12. அவன் துரியோதனனுடைய கக்ஷியில் இருந்தான்.
13. கண்ணன் அவனைக் காத்துவந்த கவச குண்டலத்தைப் பறிக்க எண்ணினார்.
14. அவர் இந்திரனை அவனிடம் அனுப்பினார்.
15. இந்திரன் ஒரு பிராமணனாக அவனிடஞ் சென்றான்.
16. அவன் கன்னனுடைய கவச குண்டலத்தை யாசித்தான்.
17. கவசத்தைக் கொடுத்தால் இறந்து விடுவேன் என்று கன்னன் தெரிந்து கொண்டான்.
18. ஆனால் அவனுக்குத் தருமஞ் செய்யாமலிருக்க மனமில்லை.
19. கன்னன் தன்னுடைய கவசத்தைக் கொடுத்து விட்டான்.

20. ஆகையால் பாண்டவர்கள் ஜயித்தார்கள்.

'இயல்வது கரவேல்.'

---

6. பிரஹ்லாதன்

1. பிரஹ்லாதன் இரணியனுடைய பிள்ளை.
2. இரணியன் ஒரு அசுரன்.
3. இரணியன் தேவர்களையும் துன்புறுத்தினன்.
4. அவன் தன்னைக் கடவுளென்று வணங்கும்படி ஜனங்களுக்குச் சொன்னன்.
5. அவன் தெய்வத்தையே மறந்து செருக்கு அடைந்தான்.
6. பிரஹ்லாதன் தெய்வ பக்தன்.
7. அவன் தன் தகப்பனுக்கு விரோதமாகக் கடவுளை வணங்கினன்.
8. இரணியனுக்குப் பிள்ளையிடத்தில் கோபமுண்டாயிற்று.
9. தெய்வத்தை மறக்கும்படி சொல்லியும் அவன் கேட்கவில்லை.
10. இரணியன் தன் பிள்ளையைக் கொன்றுவிடும்படி சொன்னன்.
11. கடவுள் அவனைக் காப்பாற்றினர்.
12. பிரஹ்லாதனைக் கொல்ல ஒருவராலும் முடியவில்லை.

13. இரணியன் பிள்ளையிடம் போய்க் கடவுள் எங்கே இருக்கிறுன் என்று கேட்டான்.
14. பிரஹ்லாதன் அவர் எங்கும் இருப்பதாகச் சொன்ஞன்.
15. அப்படியாஞல் தூணிலும் அவர் இருக்கிருரோ என்று அவன் கேட்டான்.
16. பக்தன் அவர் தூணிலும், துரும்பிலும் இருப்பதாகக் கூறிஞன்.
17. இரணியன் கோபித்துத் தூணை உதைத்தான்.
18. தூணிலிருந்து கடவுள் தோன்றிஞர்.
29. அவர் நரசிம்மாவதாரம் எடுத்தார்.
20 நரசிம்மமூர்த்தி இரணியனைக் கிழித்துக் கொன்ருர்.

'தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.'

---

7. அரிச்சந்திரன்

அரிச்சந்திரன் ஒரு அரசன். அவன் உண்மையையே பேசுபவன். அவனிடத்தில் விசுவாமித்திரருக்கு வெறுப்பு வந்தது. அவர் அரசனைப் பொய் சொல்லும்படி செய்ய எண்ணிஞர். முனிவர் யாகஞ்செய்யப் பணம் வேண்டுமென்று அரிச்சந்திரனைக் கேட்டார். அரசன் கொடுத்துவிட்டான். விசுவாமித்திரர் அதை அரசனிடமே

இருக்கும்படி சொன்னார். அவர் காட்டு மிருகங்களை யேவி நாட்டை யழிக்கும்படி செய்தார். அரசன் அவைகளைக் கொன்றான். அவர் இரண்டு பெண்களை அனுப்பி அவனைக் கலியாணஞ்செய்து கொள்ளும்படி கூறினார். அரசன் அதைத் தவிர முனிவர் கேட்பதைக் கொடுப்பதாகச் சொன்னான். முனிவர் அவனுடைய நாடு நகரங்களையும் பணத்தையும் கேட்டார். அரசன் அவற்றை யெல்லாம் கொடுத்துவிட்டுக் காட்டுக்குச் சென்றான்.

முனிவர் யாகத்திற்குக் கொடுத்த பணத்தைக் கொடுக்கும்படி கேட்டார். எல்லாவற்றையும் இழந்த அரசனிடம் பொருளேது? அவன்

பின்பு தருவதாகச் சொன்னான். விசுவாமித்திரர் அவனுடைய வழியில் துஷ்ட மிருகங்களையும் பேய் பிசாசுக்களையும் ஏவினார். அரசன் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டான். பொருள் கொடுக்கவில்லை என்று பொய் சொன்னால் அவனுக்கு இராஜ்யத்தைத் திருப்பிக் கொடுப்பதாக முனிவர் கூறினார். அரசன் உயிரை யிழந்தாலும் பொய் சொல்லத் துணியவில்லை.

அரிச்சந்திரன் காசிக்குப் போனான்; மனைவியையும் பிள்ளையையும் விற்றான்; தானும் அடிமைப் பட்டான்; முனிவர் கடனைத்தீர்த்தான். பிறகு அவனுடையபிள்ளை இறந்துவிட்டான். அரிச்சந்திரன் மனைவியாகிய சந்திரமதிபிள்ளையை எரிக்கச் சுடுகாட்டிற்கு வந்தாள். அரசனுடைய சேவகர்கள் அவளைத் திருடியென்று அரசனிடம் இழுத்துச் சென்றனர். அரசன் அவளைக் கொல்லும்படி கட்டளையிட்டான். அரிச்சந்திரனுடைய யஜமானன் சுடுகாட்டிற்குத் தலைவன். சந்திரமதியைச் சேவகர்கள் அவனிடம கொல்லும்படி விட்டுவிட்டனர். அவன் அரிச்சந்திரனையே வெட்டும்படி சொன்னான். அரிச்சந்திரன் மனைவியென்றுபார்க்கவில்லை. விசுவாமித்திரர் அரசனிடம் அப்பொழுதாவது ஒரு பொய் சொன்னால் எல்லாக் கஷ்டங்களையும் நீக்கிவிடுவதாகச் சொன்னார். அரிச்சந்தி

ரன் கத்தியை ஓங்கி வெட்டினன். கத்தி சந்திரமதியின் கழுத்தில் மாலையாய் விழுந்தது. தேவர்கள் பிள்ளையை உயிர்பெறச்செய்து அரசனுக்கு எல்லாவற்றையும் கொடுத்தார்கள்.

'நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்'

---

8. துளசிதாசர்

அஸ்தினபுரத்தில் ஆத்மாராமர் என்னும் பிராமணருக்குத் துளசிதாசர் என்பவர் பிறந்தார். அப்பொழுது அத்தேசத்து மன்னன் அக்பர் பாதுஷா. பாதுஷா ஆத்மாரரமரைத் தன்னுடைய நண்பனாக வைத்துக் கொண்டான். துளசிதாசரும் கல்வி கேள்விகளில் சிறப்புற்றார். துளசிதாசரின் பெருமையைக்கண்ட பாதுஷா அவரிடத்தும் அன்பு கொண்டார். பாதுஷாவுக்குத் துளசிதாசரை விட்டுப் பிரிய மனமில்லை.

துளசிதாசருக்குக் கலியாணம் நடந்தது. அவர் தம் மனைவியை விட்டுப் பிரியாமல் இருந்தார். ஒருநாள் துளசிதாசரை அழைத்துக்கொண்டு பாதுஷா வேட்டையாடப் போனன். திரும்பிவர நேரமாயிற்று. அதற்குள் துளசிதாசரின் மாமியார் வியாதியா யிருப்பதாகச் செய்திவந்தது. துளசிதாசரின் மனைவி தன் கணவன் வராததால் ஆத்மா

ராமரிடம் சொல்லிக்கொண்டு தாயிடஞ் சென்றாள். துளசிதாசர் வீட்டுக்குத் திரும்பினார்; நடந்ததை அறிந்து கொண்டார். அவருக்கு மனைவியைக் காணமல் பைத்தியம் பிடித்ததுபோல் ஆயிற்று. உடனே அவர் தமது வேட்டகம் போனார். இரவு நெடுநேரம் ஆயிற்று. கதவைத்திறக்க யாருமில் லாமல் எல்லாரும் தூங்கிவிட்டார்கள். அவர் சுவரிலிருந்து ஒரு பாம்பு தொங்கிக்கொண்டிருப் பதைப் பார்த்தார்; உடனே அதைக் கயிறுபோல் பிடித்துக்கொண்டு வீட்டிற்குள் ஏறிக் குதித்தார். விழித்துக்கொண்ட அவருடையமனைவி பயந்து தன் கணவர் உயிர் தப்பியது கண்டு ஆச்சரிய முற்றாள்.

கொஞ்ச காலத்திற்கெல்லாம் துளசிதாசர் காட்டிற்குப்போய்த் தவஞ்செய்தார்; ஆஞ்சனேய ருடைய கிருபையால் அவர் ஸ்ரீராமதரிசனஞ் செய் தார். துளசிதாசர் தம்முடைய பக்தியினால் செய்ய முடியாத பல காரியங்களைச் செய்தார். அவர் தமது காரியத்திலேயே கண்ணாக விருந்தார். தமக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும் அவர் லக்ஷியம் செய்ததில்லை.

'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்
துஞ்சார்...கருமமே கண்ணாயினார்.'

Q2 N30

9. நாமதேவர்

பண்டரிபுரத்தில் தாமாஜி என்ற ஒரு பக்தர் இருந்தார். அவருக்கு நாமதேவர் ஒரு நதிக்கரையில் அகப்பட்டார். குழந்தையில்லாததால் தாமாஜி நாமதேவரை எடுத்து வளர்த்தார். தாமாஜி தினந் தோறும் பண்டரி நாதருக்குப் பூஜை செய்து விட்டே சாப்பிடுவது வழக்கம். ஒரு நாள் அவர் நாமதேவரிடம் அவ்வாறு செய்யச் சொல்லிவிட்டு வெளியே சென்றார்.

நாமதேவர் பூஜை செய்துவிட்டுப் பண்டரி நாதரை ஆகாரஞ் செய்யும்படி வேண்டினர். கடவுளும் அவருடைய பக்தியைக் கண்டு சாப்பிட்டார். தாமாஜியின் மனைவி நாமதேவரைப் பார்த்துக் 'குழந்தாய்! சுவாமிக்கு நைவேத்தியஞ் செய்த அன்னம் எங்கே' என்றாள். நாமதேவர் 'சுவாமி அதைச் சாப்பிட்டு விட்டார்' என்றார். தாயாருக்கு ஆனந்தமும் ஆச்சரியமும் உண்டாயின. தாமாஜியும் ஊருக்கு வந்ததும் நடந்ததைக் கேட்டுச் சந்தோஷித்தார். அவர் தம்முடைய பிள்ளையையே மறுநாளும் பூஜை செய்ய அனுப்பினர். பண்டரி நாதர் முன்போலவே நைவேத்தியத்தைச் சாப்பிட்டார்.

85912

நாமதேவருடைய குடும்பம் மிகவும் ஏழையானது. அவருடைய தாய் தந்தையர்கள் உண்ண

உணவில்லாமல் கஷ்டப்பட்டனர். நாமதேவரோ குடும்பக் கவலையில்லாமல் பண்டரி நாதரையே தியானித்து வந்தார். ஒரு நாள் பண்டரி நாதர் ஒரு வியாபாரிபோல அவருடைய வீட்டிற்கு வந்தார். அப்பொழுது நாமதேவர் கோவிலுக்குச் சென்றிருந்தார். வியாபாரி நாமதேவரின் தாயைப் பார்த்து 'தாயே! நான் நாம தேவரின் சிநேகிதன். நீங்கள் கஷ்டப்படுகிறீர்களென்று கேள்விப்பட்டு நான் இங்கே பணத்துடன் வந்திருக்கிறேன்' என்று அவளிடம் பணத்தைக் கொடுத்து விட்டுச் சென்றார். தாயாருக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.'

---

10. ஜயதேவர்

கீதகோவிந்தம் என்னும் நூலைச் செய்தவர் ஜய தேவர். அவர் சிறந்த பக்தர். அவருடைய பெருமையை அறிந்த ஒரு வியாபாரி அவரைத் தனது குருவாகக் கொண்டான். ஜயதேவரும் அவ்வியாபாரியின் வீட்டில் கொஞ்சகாலம் தங்கினார். பிறகு அவர் தமது ஊருக்குப் புறப்பட்டார். வியாபாரி அவரை ஒரு தேரிலேற்றினான்; அதன் ஒருபுறத்

தில் நிறைந்த பொருள்களை வைத்துக் குருவை ஊரிற் கொண்டு விடுமாறு இரண்டு சேவகர்களை யும் கூட அனுப்பினுன். தேரும் புறப்பட்டது.

தேர் ஒரு காட்டின் வழியாக வந்தது. சேவகர் களுக்குப் பணத்தை யெடுத்துக் கொள்ளவேண் டும் என்ற எண்ணம் தோன்றிற்று. அவர்கள் நடுக்காட்டில் ஜயதேவருடைய கைகால்களை வெட்டி அவரையும் ஒரு புதரில் எறிந்துவிட் டனர். ஜயதேவர் வலியை இலக்ஷியம் செய்யாமல் பகவானையே தியானித்துக் கொண்டிருந்தார்.சேவ கர்கள் இருவரும் பணத்தை யெடுத்துக் கொண்டு சென்ருர்கள்.

அக்காட்டின் வழியாகச் சென்ற ஒரு இராஜ குமாரன் புதரில் ஜயதேவர் கிடப்பதைப் பார்த் தான். அவன் அவரைத் தனது தேரில் ஏற்றி வைத்துக்கொண்டு தன்னூர் சென்ருன்; ஊரில் ஒரு மடத்தைக் கட்டி அதில் ஜயதேவரை யிருத்தி அவருக்கு வேண்டியவற்றைக் கொடுத்தான். ஜய தேவர் மடத்தில் வருகிறவர்களுக்கெல்லாம் அன்னதானஞ் செய்து உபசரித்தார்.

ஒருநாள் ஜயதேவரின் கைகால்களை வெட் டிப் பணத்தை யெடுத்துக் கொண்ட இருவரும் பாகவதர்கள்போல அரசன் அரண்மனைக்கு வந்த னர். அவர்கள் அரண்மனையிலிருந்து பொருள்

களைத் திருடிக்கொண்டு போகலாமென்று எண்ணி னர். ஆனால் ஜயதேவரை அங்குக் கண்டதும் அவர்கள் நடுங்கினர். ஜயதேவர் அவர்களிடத்தில் கோபமில்லாமல் அவர்களை யுபசரித்தார். அவ் விருவரும் ஜயதேவருடைய வேண்டுகோளின் பேரில் அங்கு சிலகாலம் தங்கினர். ஜயதேவர் அவர்கள் செய்த தீமையை ஒருவரிடமும் சொல்ல வில்லை. அவர் அவ்விருவரையும் மரியாதையாக விடை கொடுத்து அனுப்பினார். ஜயதேவரின் பொறுமையே பொறுமை.

'ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்
தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்.'

11. மீராபாய்

உதயபுரத்தில் ஒரு அரசன் இருந்தான். அவன் தினந்தோறும் ஸ்ரீகோபாலனது விக்கிரகத் தை வைத்துப் பூஜை செய்து வந்தான். அவனுக்கு 'மீராபாய்' என்ற ஒரு பெண் இருந்தாள். மீரா பாய்க்குக் கோபாலனைப் பார்க்கப் பார்க்க ஆசை பெருகிற்று. மீராபாய்க்குக் கலியாணகாலம் வந் தது. அரசன் அவளுக்கு ஒரு கணவனைத் தேடிக் கொண்டிருந்தான். மீராபாய் ஸ்ரீகோபாலனையேகலி யாணஞ் செய்து கொள்ளப் போவதாகச் சொன் னாள். அரசன் அவளிடம் ஸ்ரீகோபால விக்கிரகத்

தைக் கொடுத்து 'கண்மணி! நான் உன் விருப்பப் படியே உன்னிடம் ஸ்ரீகோபாலனைக் கொடுத்து விட்டேன்' என்றான்.

மீராபாய் ஆனந்தங் கொண்டாள். அவள் தினந்தோறும்விக்கிரகத்தைஅலங்கரித்து வேணு கானத்துடன் உபசரித்துப் பூஜை செய்தாள். உலகத்திலுள்ள ஜனங்கள் இராஜ குலத்தில் பிறந்த மீராபாய் கலியாணமாகாம லிருப்பதற்காகப் பரிகாசஞ் செய்தார்கள். அரசனுக்கு அது அவமானமாக விருந்தது. அவன் தன் மனைவியைக் கூப்பிட்டு 'நமது பெண் மீராபாய் கலியாணஞ் செய்து கொள்ளாமலிருப்பது நமக்கு அவமானமாக விருக்கிறது. நீ அவளை எப்படியாவது வாழ்க்கைப்படும்படி செய்' என்றான். அரசி பலவாறு சொல்லியும் மீராபாய் கேட்கவில்லை.

பிறகு அரசன் விஷத்தைக் கொடுக்கும்படி கட்டளையிட்டான். மீராபாய் கோபாலனை எண்ணிக் கொண்டே விஷத்தைச் சாப்பிட்டாள். விஷம் மீராபாய்க்கு ஒன்றும் செய்யவில்லை. ஸ்ரீ கோபால விக்கிரகம் கறுத்தது. மீராபாய் ஸ்ரீ கோபாலரைப் பார்த்து, 'கோபாலா! நான் விஷமுண்டது உனக்குத் தாங்க வில்லையோ? உன் உடலெல்லாம் கறுத்து விட்டதே! நீ உன்னுடைய சுயரூபத்துடன் வெளிவராயோ' என்று

கதறினுள். பகவான் உடனே மீராபாய்க்குத் தரிசனங் கொடுத்தருளினர்.

'திருமாலுக கடிமை செய்.'

---

12. சங்கரர்

சமயாசாரியர்களில் சங்கரர் முதல்வர். அவர் காலடி என்ற ஊரில் பிறந்தவர். சிறுவயதிலேயே அவருடைய தகப்பனர் இறந்துவிட்டார். அவர் வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் நல்ல ஞானத்தைப் பெற்ருர். வித்தையின் பலனுக அவருக்குச் சந்நியாசியாக ஆகவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. தாயோ கதியற்றவள். அவளுக்குச் சங்கரர் ஒரே பிள்ளை. அவரும் சந்நியாசியாகி விட்டால் தாயின் கதி என்னவாகும். அவளுக்குச் சங்கரரை விட்டுப் பிரிவதற்கு மனமிராது. சங்கரருக்கு இந்த விஷயம் நன்ருகத் தெரியும்.

ஒரு நாள் சங்கரர் நதியில் ஸ்நானஞ் செய்யப்போனுர். அப்பொழுது முதலை அவருடைய காலைப் பிடித்துக்கொண்டது. அதைக்கண்ட தாயாருக்கு வருத்தம் வந்தது. சங்கரர் விட்டுப்பிரிய சமயம்வாய்த்தது என்றெண்ணினர். அவர் தாயைப் பார்த்து, 'தாயே! என் காலைக் கௌவிய முதலை என்னை நிச்சயம் தின்று விடும். நான் என்

னுடைய ஜன்மத்தை மாற்றிக்கொண்டால் ஒரு வேளை பிழைக்கலாம். அதற்கு நான் சந்நியாசி



யாக ஆகிவிடுவதே மேலானது. நான் சந்நியாசி யாகி உயிரோடு இருப்பது நல்லதா? அல்லது இப் படியே உயிரை இழப்பது நல்லதா? இரண்டில் ஒன்றைச் சொன்னல் நான் அதன்படி செய்

கிறேன்' என்றார். தாயாருக்குத் தன்பிள்ளை இறப்ப தில் இஷ்டமிருக்குமா? அவள் சங்கரருக்குச் சந் நியாசியாகும்படி உத்திரவு கொடுத்து விட்டாள். நீண்டகாலமாகக் காத்துக்கொண்டிருந்த சங்கர ருக்குக் காலம் வந்தது. அவர் தகுந்த காலம் வந் ததும் சந்நியாசியானார்.

சங்கரர் சந்நியாசியாகி ஊர் ஊராகச் சென்று ஜனங்களுக்கு மதோபதேசம் செய்தார்; தருமத்தை நிலைநாட்டினார். அவரிடம் கற்றுக் கொண்ட சிஷி யர்கள் கணக்கில்லாதவர். அவர்களும் சங்கரர் ஸ்தாபித்த மடங்களில் தங்கி ஜனங்களுக்கு ஞா னோபதேசஞ் செய்தார்கள்.

13. கம்பர்.

கல்வியிற் பெரியவர் கம்பர். கம்பர் ஒரு தமிழ்ப்புலவர். அவரை யறியாதவர் இல்லை. கம்பர் திருவழுந்தூரிற் பிறந்தவர். சடையப்பன் என்றஒரு சிற்றரசன் அவரை ஆதரித்தான். கம்பரும் சடை யப்பனிடத்தில் மதிப்பு வைத்தார். கம்பருடைய பெருமையைச் சோழராஜன் கேள்வியுற்றான். சோழன் கம்பரைத் தனது அரண்மனையில் வைத்துக் கொண்டான். புலவரும் அரசனை விட் டுப் பிரியாமல் கூடவே இருந்தார்.

ஒரு நாள் அரசன் கம்பரை அழைத்துக் கொண்டு சோலைக்குப்போனான். சோலையில் பல புஷ்பங்கள் வாசனை வீசின. மரங்கள் பழங்களைத் தாங்கமாட்டாமல் இருந்தன. பக்ஷிகள் இங்கும் அங்கும் பறந்து சந்தோஷத்தைக் கொடுத்தன. மான்கள் புல்லை மேய்ந்துகொண்டு ஓடி விளையாடின. பூக்களின் பல நிறங்கள் பார்ப்பவருக்கு ஆனந்தத்தையே கொடுத்தன.

சோழன் இவற்றையெல்லாங் கண்டு சந்தோஷித்துச் சிரித்தான். பக்கத்திலிருந்த கம்பர் அரசனைப் பார்த்து 'அரசே! நீங்கள் ஏன் சிரித்தீர்கள்' என்றார். அரசன் 'புலவரே! இந்தச் சோலையைக் காணக்காண எனக்கு ஆனந்தம் உண்டாகிறது. இவ்வளவு பெருமை படைத்த உலகம் எனக்கு அடிமை யில்லையா? என்னுடைய சக்தியை நினைத்து நான் சிரித்தேன்' என்றான்.

கம்பருக்கு அவனுடைய கர்வத்தை அடக்க ஒரு எண்ணம் உண்டாயிற்று. அவர் 'ஆம்! உலகம் உமக்கு அடக்கம், நீர் நமக்கு அடக்கம்' என்றார். அதைக் கேட்ட அரசன் கோபித்தான். அவன் கம்பரை நாட்டை விட்டு ஓடும்படி சொன்னான். கம்பர் அரசனுடைய பொருள்களை யெல்லாம் அவனிடம் கொடுத்து விட்டுச் சென்றார்.

கம்பர் சேர ராஜனிடம் போனர்; அங்கு அரசனிடம் ஒரு வேலையில் அமர்ந்தார். அரசனும் சபையாரும் ஒருநாள் அவர் செய்த இராமாயணப் பிரசங்கத்தைக் கேட்டுப் புகழ்ந்தனர். சேரன் அவரைக் கம்பரென்றறிந்தான்; அவருக்கு வேண்டியவற்றைக் கொடுத்தான்; கம்பரை மிகவும் மரியாதையாக நடத்தினன்.

சோழனுக்குக் கம்பரைப் பிரிந்ததனல் வருத்தம் உண்டாயிற்று. அவன் தான் செய்த தவற்றை நினைத்துக் கஷ்டப்பட்டான்; சேரனிடம் கம்பரை யனுப்புமாறு வேண்டிக் கொண்டான். கம்பரும் இரக்கம் கொண்டார். அவர் பல்லக்கில் ஏறிக் கொண்டு சோழனிடம் சென்ருர். சேர ராஜன் அவருக்கு வேலைக்காரனுக வந்தான். சோழன் அதைக் கண்டு ஆச்சரியமும் பயமும் அடைந்தான். பிறகு சோழனுக்கும் கம்பருக்கும் சிநேகிதம் உண்டாயிற்று.

மன்னனுக்குத் தன்தேச மல்லாற் சிறப்பில்லை;
சென்ற விடமெல்லாம் சிறப்பு. [கற்ருேர்க்கு

14. சிவாஜி மஹாராஜர்.

சிவாஜி ஒரு மஹாராஷ்டிர அரசர். மஹாராஷ்டிரம் பம்பாய் இராஜதானியில் இருக்கிறது. சிவாஜி முந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்த

வர். அவர் ஒரு பெரிய ஹிந்து இராஜ்யத்தை ஏற்படுத்தினார். அப்பொழுது ஹிந்துக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். பகைவர்கள் அவர்களுடைய நாடுகளைப் பிடுங்கிக் கொண்டார்கள். ஹிந்து மதமும் சீர்குலைந்திருந்தது. சிவாஜி மஹாராஜர் ஹிந்துக்களுக்கும் அவருடைய மதத்திற்கும் உழைத்தார்.

அவர் பயப்படாத வீரர்; நல்ல புத்திசாலி; நிறைந்த தெய்வ பக்தி உள்ளவர்; தாய் சொல்லை அவர் எப்பொழுதும் மீறமாட்டார். அவருடைய இராஜ்யத்தில் தருமம் குடிகொண்டது. குடிகள் சௌக்கியமாக இருந்தார்கள். மஹாராஜர் குற்றம் செய்தவரைத் தண்டித்தார்; சாதுக்களை ரக்ஷித்தார். அவரிடத்தில் பக்ஷபாதம் கிடையாது. இவ்வளவு நற்குணங்களை அவர் எவ்வாறு பெற்றார் ?

சிவாஜிக்குத் தந்தை சிறுவயதிலேயே இறந்து விட்டார். அவருடைய தாயே அவரை எடுத்து வளர்த்தாள். தாய் இராமாயண பாரதக் கதைகளைக் குழந்தைக்கு எடுத்துச் சொன்னாள்; அவரிடத்தில் தெய்வ பக்தியை உண்டாக்கினாள். சிவாஜி அவருடைய தாயை எப்பொழுதும் மறக்கவில்லை. தாயைக்கேட்டுக் கொண்டே எல்லாக் காரியங்களுக்கும் அவர் போவார். படத்தில் சிவாஜி தாயை


SEKAR

வணங்குவதை நீங்கள் பாருங்கள். சிவாஜி போருக்குக் கிளம்புகிருர். தாய் அவரை ஆசீர் வாதம் செய்து அனுப்புகிருள். தாயாருடைய ஆசீர்வாதத்தைப்பெற்ற அவருக்கு ஜயத்தின்மேல் ஜயம் ஏற்பட்டது. நீங்களும் தாயை வணங்குங் கள்; தாய் சொல்லைக் கேளுங்கள். அப்படி செய் தால் நீங்களும் நல்ல நிலைமைக்கு வருவீர்கள்.

'தாய்சொற் றுறந்தோர் வாசகமில்லை.'

தோத்திரப்பாக்கள்.

பட்டினத்தார் பாடல்

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே
மண்ணுண்டு போகுதையோ கெடுவீரிந்த மானிடமே. 1

நினைமின் மனமே! நினைமின் மனமே!
சிவபெரு மானை செம் பொன்னம்பலவனை
நினைமின் மனமே! நினைமின் மனமே!
அலகைத் தேரின லமரு காலின்.
உலகப் பொய் வாழ்க்கையை உடலை யோம்பற்க!
பிறந்தன இறக்கும்! இறந்தன பிறக்கும்!
தோன்றின மறையும்! மறைந்தன தோன்றும்!
பெருத்தன சிறுக்கும்! சிறுத்தன பெருக்கும்!
உணர்ந்தன மறக்கும்! மறந்தன் உணரும்!
புணர்ந்தன பிரியும்! பிரிந்தன புணரும்!
அருந்தின மலமாம்! புனைந்தன அழுக்காம்!
உவப்பன வெறுப்பாம்! வெறுப்பன உவப்பாம்!
என்றிவை யனைத்தும் உணர்ந்தனை யன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்தும்! அனைத்து நினைக்கொன்றன!
தின்றனை யனைத்தும்! அனைத்தும் நினைத்தின்றன!
பெற்றனை அனைத்தும்! அனைத்தும் நினைப்பெற்றன!
ஓம்பினை யனைத்தும்! அனைத்தும் நினை யோம்பின!
செல்வத்துக் களித்தனை! தரித்திரத் தழுங்கினை!
சுவர்க்கத திருந்தனை! நரகிற் கிடந்தனை!

இன்பமுந் துன்பமும் இருநிலத் தருந்தினை!
அம்பலத் தரசனை ஆனந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்கு நெக்குருகித்
திருச் சிற்றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனமே! நினைமின் மனமே! 2

தாயுமானவர்.

அரும்பொனே! மணியே யெனன்பே எனன்பான
அறிவே எனறிவி லூறும்
ஆனந்த வெள்ளமே யென்றென்று பாடினேன்
ஆடினேன் நாடி நாடி
விரும்பியே கூவினேன் உளறினேன் அலறினேன்
மெய்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரி யெனஎனிருகண் மாரிபெய்யவே
வேசற் றயர்ந்தேண் யான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனுலுமுனை
இடைவிட்டு நின்ற துண்டோ
என்றுநீ அன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியா வெறும்
துரும்பனேன் என்னினும் கைவிடுதனீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே! 3

கல்லாத நெஞ்சம் கரைந்துருக எத்தொழிற்கும்
வல்லாய் நின்னின்பம் வழங்கினு லாகாதோ!
நேசஞ் சிறிதுமிலேன் நின்மலனே நின்னடிக்கே
வாசஞ் செயவிரங்கி வாவென்று லாகாதோ!

கண்ணாடி போல எல்லாம் காட்டுந் திருவருளை
உண்ணாடி ஐயா உருகவைத்தா லாகாதோ!
கையுங் குவித்திரண்டு கண்ணருவி பெய்யவருள்
ஐயநின் றாட்கீழே அடிமைநின்றா லாகாதோ!
முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தே என்னுள்ளத் தெளிவே பராபரமே!
கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே யானந்த வியப்பே பராபரமே! 4

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாம்
சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வும்ஓர் இந்த்ர சாலக்கோலம்
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமனமாங் கிருமிசேர்ந்த மலபாண்டமோ
வாஞ்சனை யிலாதகனவே
எந்தநாளுஞ் சரியெனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவு பகலில்லா விடத்
தேகமாய் நின்றநின் அருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும் வகையென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

சுபம்.

85912

Printed at the B. N. Press. Mount Road, Madras.

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE.

Tamil Books For Nondetailed Study.

		ரூ.	அ.	பை.
Sri Rama Dhuthan	...	0	[illegible]	[illegible]
Mani Thiral No. 4	...	0	6	0
,, No. 3	...	0	4	0
,, No. 2	...	0	3	0
,, No. 1	...	[illegible]	2	6

Detailed Study.

வாசகமஞ்சரி.

பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பாடத்திற் கேற்ற[illegible]

வாசக மஞ்சரி பாலர் பாடம்	...	0	2	6
வாசக மஞ்சரி மலர் 1. இரண்டாம் வகுப்பு	...	0	3	0
ஷை ,, 2. மூன்றாம் வகுப்பு	...	0	4	0
ஷை ,, 3. நான்காம் வகுப்பு	...	0	5	0
ஷை ,, 4. ஐந்தாம் வகுப்பு	...	[illegible]	6	0
ஷை ,, 5. ஆறாம் வகுப்பு	...	0	7	0
ஷை ,, 6. ஏழாம் வகுப்பு	....	0	8	0
ஷை ,, 7. எட்டாம் வகுப்பு	....	0	9	0

For Copies, apply to:—

MURTHY & Co

Book-Sellers & Publi[illegible]ers,

10, North Ramalinga Mudal[illegible] Street,

MA[illegible]AVARAM.